**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 227 / 2024**

| Deposition of Witness for | Prosecution PW6 |
|---|---|
| | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : Thiru. Sivakumar |
| Father / Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 3rd day of August, 2026.

**( A1 is present. A2, A3 are absent, Petition filed and allowed )**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :

**முதல் விசாரணை :**

நேரம் 12.56 மணி

நான் தற்போது தேர்தல் தாசில்தாராக சென்னை ரிப்பன் பில்டிங்கில் பணிபுரிந்து வருகிறேன். 2024 ஆம் வருடம் சோழிங்கநல்லூர் வட்டாட்சியராக நான் பணியில் இருந்தபோது குற்ற எண் 877/2023, SC/ST வழக்கு சம்பந்தமாக சுகுமாரன்

என்பவருக்கு சாதி குறித்த மெய்தன்மை சான்றிதழ் கோரியிருந்தார்கள். 01-03-2024 அன்று அவருக்கு நாடார் என்று சாதி சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. அது எங்கள் அலுவலகத்தில் தான் வழங்கப்பட்டது என்ற சாதிகுறித்த உண்மை தன்மை சான்றிதழ் வழங்கினேன். போலீசார் இதுசம்பந்தமாக என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். சுகுமாரன் என்பவரது சாதி குறித்த மென் தன்மை சான்றிதழ் மற்றம் சாதி சான்றிதழின் நகல் **அ.த.சா.ஆ.3 வரிசை** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

26-02-2024 அன்று போலீசாரால் வழங்கப்பட்ட வேண்டுகோள் கடிதத்துடன் எந்த ஆவணமும் இணைக்கப்படவில்லை என்றால் சாதி சான்றிதழ் இணைக்கப்பட்டிருந்தது. நான் தவறாக கூறுகிறேன் என்றாலும் சாதி சான்றிதழ் தேதி 01-03-2024 என்றாலும் முன்தேதியிட்டு கொடுக்கப்பட்ட வேண்டுகோள் கடிதத்தில் அது இணைக்கப்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. போலீசார் என்னிடம் நடத்திய விசாரணையில் எந்த ஆவணங்களை பரிசீலனை செய்து வழங்கப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாசில்தாரிடம் சாதி சான்றிதழ் மேற்படி அலுவலகத்தில் வழங்கப்பட்டதா என்று மட்டும் தான் கேட்டேன். மேற்படி சுகுமாரனுக்கு வழங்கப்பட்ட சாதி சான்றிதழ் கையொப்பம் செய்த அதிகாரியை நான் விசாரித்தேனா என்றால் நான் ஆன்லைனில் சரியா என்று பார்த்தேன். ஆன்லைனில் உள்ளதை நான் சரிபார்த்தேன் அது எவ்வாறு வழங்கப்பட்டது என விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். நான் வழங்கிய மெய் தன்மை சான்றிதழ் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.